**Chenkaantal**

*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Ruined Shiva Temples in Ramanathapuram District

**T.R.Sabitha**, Research Scholar, Department of Tamil,
Sethupathy Govt. Arts College, Ramanathapuram, Tamil Nadu, India.
**Dr R. Athisayam**, Assistant Professor, Department of Tamil,
Sethupathy Government Arts College, Ramanathapuram, Tamil Nadu, India.
**ORCiD: [1]https://orcid.org/0000-0002-1741-415X**
**DOI: 10.5281/zenodo.6619738**

## Abstract

*Ramanathapuram district is closely associated with the Ramayana epic and the temples here are associated with the main characters of the Ramayana and the places mentioned. They were built and maintained by the Cholas and Pandyas. These temples are now in a state of repair. Apart from that, these are not just temple buildings but also archeological sites that bear witness to the archeological features and history of Tamil heritage. This research has adopted a field research approach to ensure the authenticity of the sources. Hence, the article studied about the ruined shiva temples in Ramanathapuram District*

.

**Keywords:** Ruined, Architecture, Temple chronology, Legendary chronicle, Divine Tank, Temple.

## Witness

[1] Interview. V.Rajaguru, Archeologist, 12.08.2018.
[2] Interview. Vainava Kurukkal, Temple Priest, 10.02.2019.
[3] *Kumutham*. Bakthi Special, 08.03.2018, p.58.
[4] Interview. Sivanathan Pattar, Temple Priest, 14.03.2019.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# இராமநாதபுரம் மாவட்ட சிதிலமடைந்த சிவன் கோவில்கள்

**து. ரா. சபிதா,** ஆய்வு மாணவர், தமிழ் உயராய்வு மையம்,
சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம், தமிழ்நாடு, இந்தியா.
**முனைவர் ர. அதிசயம்,** உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: [1]https://orcid.org/0000-0002-1741-415X**
**DOI: 10.5281/zenodo.6619738**

**ஆய்வுச் சுருக்கம்**

*இராமநாதபுரம் மாவட்டம் இராமாயன இதிகாசத்துடன் நெருங்கிய தொடர்புடையது, இராமாயணத்தின் முக்கிய கதாப் பாத்திரங்களுடனும், குறிப்பிடப்படும் இடங்களுடனும் தொடர்புடையனவாக இங்குள்ள கோவில்கள் இருக்கின்றன. சோழர்களாலும், பாண்டியர்களாலும் கட்டப்பெற்று, பராமிக்கப்பட்டும் வந்த இக்கோவில்கள் இன்று சிதிலமடைந்த நிலையில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இவை கோவில் கட்டடங்களாக மட்டுமல்லாமல் நம் மாட்டத்தின் புராணச் சிறப்புகளையும், வரலாறுகளையும் தாங்கி நிற்கும் சுவடுகளாகவும் விளங்குகின்றன. இக்கட்டுரையானது கள ஆய்வு அணுகுமுறையில் அமைகிறது. அவ்வகையில் இக்கட்டுரையானது இராமநாதபுரம் மாவட்ட சிதிலமடைந்த பழமையான கோவில்களைப் பற்றி எடுத்துரைப்பதாக அமைகிறது.*

**திறவுச்சொற்கள்**: சிதிலமடைந்த, கட்ட்ட அமைப்பு, தலவரலாறு, புராண வரலாறு, தீர்த்தம், கோவில்.

**முன்னுரை**

தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டம் மிகப்பெரிய மாவட்டமாகும். இதன் பரப்பளவு 4216.கி.மீ. சுற்றளவினைக் கொண்டது. இப்பகுதி பாண்டியர்களாலும் பிற்கால நாயக்கர்களாலும் மற்றும் சேதுபதி மன்னர்களாலும் ஆளப்பெற்றது. இம்மாவட்டத்தில் சிறுதெய்வ வழிபாட்டினோடு பெருந்தெய்வ வழிபாடும் சிறந்து விளங்குகின்றது. குறிப்பாக சிவன் வழிபாடே முக்கய பங்கு வகிக்கிறது. மன்னர்களின் சிவத் தொண்டு. இராமநாதபுரத்தில் பாண்டியர்களாலும், பிற்கால சேதுபதிகளாலும் மிகுதியான சிவன் கோவில்கள் கட்டப்பட்டு உள்ளன. சேதுபதிகள் காலத்தில் கோவில்களில் தானங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் சிவபக்தர்களாக இருந்த போதிலும் வைணவ சமயத்தினையும் போற்றி நின்றனர். புகழ் பெற்ற இராமேஸ்வரம் கோவில் மற்றும் நாற்பதிற்கும் அதிகமான சிவன் கோவில்கள் இப்பகுதியில் காணப்படுகின்றன.

**சிதிலமடைந்த சிவன் கோவில்கள்**

இராமநாதபுரம் என்றாலே இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவில், உத்திரகோசமங்கை மங்களநாதர் ஆலயம், திருவாடானை ஆதிரெத்தினேஸ்வரர் ஆலயம் போன்ற பிரபலமான புராணச் சிறப்புமிக்க கோவில்களே நம் நினைவிற்கு வரும். ஆனால் இவற்றைத் தாண்டி பல சிவன் கோவில்களும் சிறப்புவாயந்த கோவில்களாக இப்பகுதியில் உள்ளன. இக்கோவில்கள் சரியான

பராமரிப்பும் வழிபாடும் இன்றி கேட்பாரற்றுக் கிடக்கின்றன. இதனால் நம் மாவட்டத்தின் தொன்மையையும் சிறப்புகளையும் சிறிது சிறிதாக இழந்து கொண்டு இருக்கிறோம்.

**கடலாடி வட்டம்**

***ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீதிருவனந்தீஸ்வரர் ஆலயம் மேலக்கிடாரம்.***

இராமநாதபுரம் – கடலாடி வட்டத்தில் சிக்கல் அருகேயுள்ள இக்கோவில் கிழக்கு நோக்கி மிகப்பழமையான கல் மண்டபத்துடன் காட்சியளிக்கிறது. ஆலயத்தின் உள்ளே 16 கால்கள் கொண்ட மகாமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை ஆகியவை காணப்படுகின்றன. இத்தல கருவறையில் மூலவர் சிவபெருமான் நாகாபரணத்துடன் திருவனந்தீஸ்வரர் என்ற திருநாமத்துடன் லிங்கவடிவில் காட்சியளிக்கிறார்.

**கோவில் கட்டட அமைப்பு**

மூலவர் விமானம் தஞ்சை பெரிய கோவில் விமானத்தைப் போன்ற அமைப்பில் சுட்டசெங்கற்களால் கட்டப்படுள்ளது. இவ்விமானம் கலசங்கள் இன்றி சூரிய ஒளி மற்றும் மழைநீர் சுவாமியின் மீதுபடும் நிலையில் சிதைந்து காணப்படுகிறது. லிங்கத்தின் ஆவுடைப்பகுதி சதுர வடிவில் இருப்பதால் இக்கோவில் சோழமன்னர்களால் கட்டப்பட்டதாகவும், அதன்பின் பாண்டியர்களால் திருப்பணிகள் செய்து பராமரிக்கப்பட்டு வந்த செய்தியையும் அறியமுடிகிறது. கருவறையின் பின்பகுதியில் கல்வெட்டுகளும் காணப்படுகிறது.

**தலவரலாறு**

"மலேசியாவின் ஒரு பகுதியாக கிடாரம் என்னும் ஊர் சோழ மன்னரான இராஜேந்திர சோழனால் கைப்பற்றப்பட்டது. இந்த வெற்றிக்குக் காரணமாக இருந்த சோழ மன்னர் கிடாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன் ஸ்ரீ திருவனந்தீஸ்வரரை வழிபட்டுச் சென்றதாகவும் தனக்குக் கிடைத்த வெற்றியால் மனமகிழ்வுடன் இத்தலத்தில் சிவன் கோவில் எழுப்பியதாகவும்" கல்வெட்டுச் செய்தி கூறுவதாகத் தொல்லியல் ஆய்வாளர் வே.ராஜகுரு அவர்கள் தெரிவிக்கின்றார்.

**புராண வரலாறு**

அஷ்ட நாகங்களில் ஒருவரான அனந்தர் எனும் நாகம் அவதரித்த தலமாக இத்தலம் விளங்குகிறது. இத்தலத்தில் சிவபெருமானை அனந்தர் வழிபட்டதால் அவரின் பெயராலேயே அனந்தீஸ்வரமுடையார் என்று அழைக்கப்பட்டு அடையெடுத்த ஆகு பெயராக திரு என்பதோடு "திருவந்தீஸ்வர முடையார் ஆலயம்" என விழங்கி வருகிறது. இவ்வாலயம் 2000 ஆண்டுகளுக்கும் பழமையானது எனவும், இத்தலத்திலுள்ள நந்தி 800 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனவும் கூறப்படுகின்றது.

**தீர்த்தம்**

கோவிலின் இடதுபுறத்தில் பெரியகுளம் உள்ளது. இதிலுள்ள நீர் இரும்புச் சத்தினை அதிக அளவு கொண்டதாகக் கூறுகின்றனர். தற்போது சிவபக்தர்களால் ஆலயத்தைச் சுற்றிலும் புல்வெளிகள் அமைத்து பராமரிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

**திருவாடானை வட்டம்**

***ஸ்ரீ சிவகாமிஅம்பாள் சமேத ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயம், கலியநகரி***

கலியநகரி என்னும் கிராமப் பகுதியில் இத்தலம் அமைந்துள்ளது. மிகப்பழமையான இக்கோவில் பாதி அளவில் சிதிலமைந்த நிலையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மகாமண்டபம், அர்த்தமண்டபம்,

கருவறை என்ற அமைப்பில் உள்ளது. கருவறையில் சிவபெருமான் சிறயதாக லிங்கவடிவில் காசி விசுவநதர் என்ற திருநாமத்துடன் அருளுகிறார். கருவறை விமானம் சிதிமடைந்து கலசம் இல்லாமல் உள்ளது.

**கோவில் அமைப்பு**

கோவிலின் முன்புறம் மிகப்பழமையான மண்டபம் இருக்கிறது. சுவாமி சன்னதி கிழக்கு நோக்கியுள்ளது. இதன் வலப்புறத்தில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் தனிச்சன்னதியாக நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். ஆலயத்தின் தெற்கு வாயிலின் வெளியேயுள்ள மண்டபத்தில் ஸ்ரீ தேவி புதேவி சமேதரராக ஸ்ரீ மந் நாராயணன் பெரிய திருமேனி கொண்டு சிதைந்த நிலையில் காட்சி கொடுக்கின்றார். இவ்வாலயம் முழுவதும் கருங்கற்களாலும் மணற்பாறைகளாலும் கட்டப்பட்டுள்ளன. இப்பகுதி சோழர் கால வணிகத்தலமாக இருந்திருக்கலாம் என்று கூறுகின்றனர்.

**சுரங்கப்பாதை**

ஆலயத்தின் முன்பகுதியில் நந்திதேவர் நந்தி மண்டபத்தில் காட்சியாளிக்கின்றார். “இதன் அருகே சுரங்கப்பாதை ஒன்றுள்ளது. இப்பாதை கீழ் நோக்கி ஆலயத்திற்கு அருகேயுள்ள விநாயகர் கோவிலுக்கும் மேல்நோக்கி திருப்புனவாசல் பழம்பதிநாதர் ஆலயம் வரை செல்லும் வழியாக இருக்கிறது” என ஆலய அர்ச்சகர் கூறுகிறார். இப்பாதையின் வழியே மன்னர்கள் முதலில் விநாயகரை வழிபட்டு பின்பு இத்தல சிவபெருமானையும், திருப்புனவாசல் சிவபெருமானையும் பூஜை செய்து வழிபட்டனர் எனக் கூறுகின்றனர்.

**தீர்த்தம்**

இக்கோவிலின் அருகே கிணறு ஒன்று மண்ணில் புதையுண்ட நிலையில் காணப்படுகின்றது. இக்கிணறு தீர்த்தமாகப் பயன்பாட்டில் இருந்திருக்க வேண்டுமெனவும் சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தால் புதையுண்டு அழியும் நிலை ஏற்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிகின்றது.

**முதுகுளத்தூர் வட்டம்**

**ஸ்ரீ தரணீஸ்வரர் ஸ்ரீ புஸ்பவனேஸ்வரி திருத்தலம். அ.தரைக்குடி.**

முதுகுளத்தூருக்கு அருகிலுள்ள அ.தரைக்குடி என்னும் கிராமத்தில் இத்தலம் அமைந்துள்ளது. வடகிழக்குத் திசையில் பெரிய சுற்றுச்சுவர் சூழ இயற்கை எழில் கொஞ்சும் அழகில் சோழர்கால மற்றும் பாண்டியர் கால கட்டடக் கலையை எடுத்துக்காட்டி நிற்கின்றது இத்திருத்தலம். இரண்டு ஏக்கர் சுற்றளவு கொண்ட முகப்பு மண்டப வாசலில் பலிபீடம் உள்ளது. முன்பகுதியில் பதினாறு கால் மண்டபமும், அதனைத் தொடர்ந்து மகாமண்டபமும், அர்த்த மண்டபமும், கருவறையும் எனக் காட்சி தருவதைக் காணமுடிகிறது. மகாமண்டபத்தின் மேலே பாண்டியர்களின் சின்னமான “மீன்” செதுக்கப்பட்டுள்ளதைப் பார்க்க முடிகிறது.

கருவறையில் மூலவராக தரணீஸ்வரர் லிங்கமாகக் காட்சி கொடுக்கிறார். மகாமண்டபத்தின் வடக்குப்பகுதியில் அம்பாள் சன்னதி உள்ளது. மூலவர் விமானம், அம்பாள் விமானம் இரண்டுமே இரட்டை அடுக்கு அமைப்பில் செங்கற்களால் கட்டப்பட்டு, வேசர வடிவில் உள்ளீடு இல்லாமல் கோபுரமே மூலவருக்கு விதானமாக அமைந்துள்ளது. இத்தலத்தின் நுழைவு வாயிலான இராஜகோபுரம் பாதி சிதைந்த நிலையிலுள்ளது. ”ஒவ்வொரு ஆண்டும் தட்சிணாயனம், உத்திராயனம் என இருகாலங்களிலும் குறிப்பிட்ட நாட்களில் (மார்ச் 21, 22, 23 மற்றும் செப்டம்பர் 21, 22, 23) மூலவர் மேல் சூரியக் கதிர்கள் விழுமாறு விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது”3 சிறப்பிற்குரியது.

**திருத்தல வரலாறு**

இத்தலம் சோழர் காலத்தில் கட்டப்பட்டு பாண்டிய மன்னர் காலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. கோவிலின் கருவறை, அர்த்த மண்டபம், மூலவர் விமானம் ஆகியவை சோழமன்னர்களின் ஆட்சியிலும், மகாமண்டபம், மதில்சுவர் அம்மன் சன்னதி, முகமண்டபம், சிதைவுற்ற இராஜகோபுரம் ஆகியவை பாண்டியர் காலத்திலும் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர்.

**பிற சன்னதிகள்**

இத்தல முகமண்டப வாசலில் நந்திதேவர் காட்சியளிக்கின்றார் அர்த்தமண்டபத்தின் உட்பகுதியில் வலப்புறம் விநாயகர், இடப்புறம் சுப்பிரமணியர் மற்றும் விஷ்ணுத் திருமேனிகள் இருக்கின்றன. சுற்றுப் பிரகாரத்தின் கன்னி மூலையில் கன்னி மூல விநாயகர் உத்தீச கணபதியுடன் காட்சியளிக்கின்றார். வலப்புறத்தில் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியர், தென்புறத்தில் சனீஸ்வரர், நவக்கிரகங்கள், பைரவர், நந்தி போன்றோரும் அருள்பாலிக்கின்றனர். இத்தலத்தின் சிறப்பாக உத்தீச விநாயகர் (விநாயகரின் தும்பிக்கையில் அமர்ந்துள்ள அம்பாளின் யோனியில் உள்ளதாக சித்திரிக்கப்பட்டிருக்கும்) சன்னதி உள்ளது.

**தீர்த்தம்**

இத்தலத்தின் தீர்த்தமாக நூபுரகங்கை உள்ளது. கோவிலின் கிழக்குப் பகுதியில் நூபுர கங்கை என்னும் கிணறு இருக்கிறது. பிரகாரத்தினைச் சுற்றிலும் நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது. அம்பாள் சன்னதியின் பின்புறத்தில் தலவிருட்சமான வில்வமரம் நிற்கின்றது. மூலவர் சன்னதியின் வெளிப்பகுதியில் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது.

**பரமக்குடி வட்டம்**

**பட்டீஸ்வரமுடையார் திருக்கோவில் கீழப் பார்த்திபனூர்.**

பரமக்குடி அருகே கீழப் பார்த்திபனூர் என்னும் ஊரில் அமைந்துள்ள இவ்வாலயம் முழுவதும் மண்ணில் புதையுண்ட நிலையில் சிதிலமடைந்து காணப்படுகிறது. கருவறையிலிருந்து சுவாமியை எடுத்து ஒரு சிறிய சன்னதி அமைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

**தல வரலாறு**

இக்கோவில் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாக இருக்கலாம் என்றும், விக்கிரமாதித்த மன்னன் காலத்தில் இத்திருத்தலம் எழுப்பப்பட்டது எனவும் கூறுகின்றனர். சிவபெருமான் உமாதேவியுடன் தேவலோக மங்கையரான ரம்பை, ஊர்வசி, மேனகை ஆகியோரின் நடனத்திற்குத் தீர்ப்பு வழங்கியதாகவும், அதனை விக்கிரமாதித்த மன்னரின் அமைச்சரான “பட்டி” தன்செவி குளிர கேட்டு மன்னனிடம் விவரித்தான். மன்னன் அவ்விடத்திலே ஆலயத்தை எழுப்பி, சிவபெருமான் சுயம்பலிங்க வடிவில் காட்சி தந்து அருளினார். பட்டியினால் இக்கோவில் அமைக்கப்பட்டதால் அவர் பெயரினாலே “பட்டீஸவரமுடையார்” ஆலயம் என வழங்கலாயிற்று எனவும் செவிவழிச் செய்தியாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இக்கோவில் கற்றிளி வகையைச்சார்ந்ததாக இருக்காலம் என அறிய முடிகின்றது.

**கோவில் அமைப்பு**

இத்தலத்தின் முகப்புத் தோற்றத்தில் நந்திதேவர் தனியாக காட்சியளிக்கிறார். சிதைந்த மண்டபத்தின் வலப்புறம் விநாயகரும் இடப்புறம் கல்லில் செதுக்கப்பட்ட பாதமும் கல்லிலே வேல் போன்ற அமைப்புடைய கருங்கல் சிற்பமும் காணப்படுகின்றது.

கோவில் அமைப்பு இத்தலத்தின் முகப்புத் தோற்றத்தில் நந்திதேவர் தனியாக காட்சியளிக்கிறார். சிதைந்த மண்டபத்தின் வலப்புறம் விநாயகரும், இடப்புறம் கல்லில் செதுக்கப்பட்ட பாதமும். கல்லிலே வேல் போன்ற அமைப்புடைய கருங்கல் சிற்பமும் காணப்படுகின்றது.

**தீர்த்தம்**

இக்கோவிலில் தீர்த்தம் இடம்பெறவில்லை ஆலயத்தின் அருகே புன்னைமரம் சிறியதாக இருக்கிறது. இது இத்தலத்தின் தல விருட்சமாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

ஶ்ரீ விசாலாட்சிஅம்பிகா சமேத காவிவிஸ்வநாதர் ஆலயம், நெல்மடூர் பரமக்குடி பகுதியில் நெல்மடூர் என்னும் சிற்றூரில் இத்தலம் கல்மண்டபங்களால் கட்டப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இவ்வாலயம் தற்போது முழுவதும் சிதைந்த நிலையில், கோவில் இருந்தமைக்கான எச்சங்கள் மட்டுமே காணப்படுகின்றன். இத்தலத்தில் இருந்த மூலவர், அம்பாள், தெட்சினாமூர்த்தி, விநாயகர், முருகன் போன்ற திருவுருவக் கற்சிலைகளை மக்கள் தனி சன்னதி அமைத்துப் பராமரித்து வருகின்றனர்.

**தல வரலாறு**

இத்திருக்கோவிலானது பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சுவாமி அம்பாள் சன்னதிகள் தனித்தனியாகக் கட்டப்பட்டு சுட்ட செங்கற்களால் ஆன மண்டபங்களுடன் இருப்பதால் இத்தலம் சோழர் காலத்தில் எழுப்பப்பட்ட கோவிலாக இருக்கலாம் எனக் கூறுகின்றனர்.

**தீர்த்தம்**

கோவிலின் அருகேயுள்ள பெரிய ஊரணிக்குளம் தீர்த்தமாக இருந்திருக்க வேண்டுமெனக் கருதமுடிகின்றது. இவ்வுரணியில் பூஜைப் பொருட்கள் சிதலமடைந்த நிலையில் கிடைத்திருப்பதாகவும் அவை இக்கோவிலின் பயன்பாட்டுப் பொருளாக இருக்க வேண்டுமெனவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் ''ஊரணியைத் தோண்டிய போது 3 அடி ஆழத்திற்குள் சுட்ட மண்பாண்டம், உலோகங்கள் ஒற்றைக்கண் குத்துவிளக்குகள் செம்புத்தாழி, அம்மிக்கல் போன்றன கண்டெடுக்கப்பட்டதாக'' இவ்வாலய அர்ச்சகர் கூறுகின்றார். இத்தகவலின் அடிப்படையில் பல நூற்றாண்டுகளுக்கு முன் இவ்வாலயம் சிறப்பான வழிபாட்டினைக் கொண்டிருக்க வேண்டுமென ஊகிக்க முடிகின்றது பின் சரியான பராமரிப்பு இல்லாமையால் சிதிலமடைந்து போயிருக்க வேண்டுமென எண்ண முடிகின்றது.

**திருவிழாக்களும் வழிபாட்டு முறைகளும்**

திருவனந்தீஸ்வரமுடையார் ஆலயம், கலியநகரி காசி விசுவநாதர் ஆலயம், தரணீஸ்வரர் ஆலயம் பட்டீஸ்வரமுடையார் கோவில், நெல்மடூர் காசி விஸ்வநாதர் கோவில் ஆகிய ஐந்து கோவில்களும் சிதிமடைந்த நிலையில் காணப்படுவதால் மக்களும் திருவிழாக்களிலும் வழிபாட்டு முறைகளிலும் அதிக அளவில் கலந்து கொள்வதில்லை. தமிழ்நாடு அரசினால் கீழ் கொண்டு வரப்பட்ட அனைத்து கோவில்களிலும் ஒரு காலப் பூஜைத் திட்டத்தின் கீழ் இவ்வாலயங்களில் தினசரி வழிபாடு நடைபெற்று வருகின்றது. பிரதோசம் மற்றும் மகா சிவராத்திரி ஆகிய இரண்டு சிறப்பு வழிபாடுகள் மட்டுமே இத்தலங்களில் நடைமுறையில் உள்ளன இவ்வழிபாடுகளில், இப்பகுதி மக்கள் மட்டுமே சிறிதளவில் கலந்து கொள்கின்றனர்.

**முடிவுரை**

இராமநாதபுர மாவட்டத்தின் சிவன் கோவில்கள் கட்டடக்கலைகளில் பழமையுடையனவாக

விளங்குகின்றன. சில கோவில்களுக்கு தல விருட்சமும் தீர்த்தமும் காணப்படவில்லை. கோவில் கட்டட அமைப்புகள் சிதைந்தும் அழிந்து பட்டும் காணப்படுகின்றன. சில கல்வெட்டுகள் சிதைந்து காணப்படுவதால் முழுமையான செய்தியினை அறிய முடியவில்லை. பல இடர்பாடுகள் இருப்பினும் இராமநாதபுரம் மாவட்டம் ஆன்மீக வளர்ச்சியில் அளப்பரிய ஆற்றலை உள்ளடக்கியது என்ற உண்மை மட்டும் தெளிவாக உணரமுடிகிறது.

**தகவலாளர்கள்**

[1] பேட்டி .வே..இராஜகுரு, தொல்லியல் ஆய்வாளர் நாள் 12.08.2018
[2] பேட்டி. வைரவகுருக்கள் ஆலய ஆர்ச்சகர் நாள் 10.02.2019
[3] குமுதம், பக்தி ஸ்பெசல் நாள் 08.03.2018 ப58
[4] பேட்டி சிவநாதன் பட்டர், ஆலய அர்ச்சகர் நாள் 14.03.2019

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.